செ.வெ.எண்.70 நாள்.20.07.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில், குற்றால சீசன் மற்றும் குற்றால சாரல் திருவிழா பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்–**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**––––––––**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளுக்கு சீசன் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் 2017 சாரல் திருவிழா குறித்த முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.07.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

குற்றாலம் சீசனை முன்னிட்டு பல்வேறு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து சுற்றுலா பயணிகள் அதிகளவில் ஆண்டுதோறும் வருகை புரிவார்கள். குற்றலாத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, போக்குவரத்தினை ஒழுங்கு செய்து, அருவிகளில் பொதுமக்களின் கூட்டத்தினை கட்டுப்படுத்தி, சமூக விரோத செயல் நடைபெறாதவாறு காவல் துறையினர் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், CCTV கண்காணிப்பு கேமராக்கள் நன்றாக செயல்படுகிறதா என்பதை கண்காணித்திட வேண்டும். பெண்கள் உடை மாற்றும் அறை பகுதிகளில் கூடுதலாக பெண் காவலர்களை நியமித்து உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்திட வேண்டும். தீயணைப்புத் துறையினர் தீ தடுப்பு மற்றும் மீட்பு பணிகளுக்கு தயார் நிலையில் இருந்திட வேண்டும். விபத்து மீட்பு பணிகளுக்கு 108 அவசர கால ஊர்தி தயார் நிலையில் வைத்திட வேண்டும். சிறப்பு மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அரசுப் போக்குவரத்து கழகம் பொதுமக்களின் வருகைக்கு தகுந்தவாறு பேருந்து வசதிகளை ஏற்படுத்திட வேண்டும். காலாவதியான உணவுப் பொருட்கள் விற்கப்படுகிறதா என்பதை உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கண்காணித்திட வேண்டும். பெண்கள் உடை மாற்றும் பகுதியில் துப்புரவுப் பணி மற்றும் கட்டணம் வசூல் பணிகளில் சீருடை அணிந்த பெண்களை மட்டுமே பணியில் ஈடுபடுத்த வேண்டும். மேலும், குப்பைகளை உடனுக்குடன் கூடுதல் துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அருவி மற்றும் முக்கியமாக பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லும் பகுதிகளில் கூடுதல் மின் விளக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அருவி பகுதிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தமாக வைத்திடவும், சுற்றுலா பயணிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட (RO System) குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அருவிகளில் குளிக்கும் பொழுது சோப்பு, ஷாம்பு, எண்ணெய் உபயோகிக்கக் கூடாது என்ற வாசகத்தினை அனைத்து அருவி பகுதிகளிலும் விளம்பரப் பலகைகளை வைத்திட வேண்டும். குற்றாலத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் சாரல் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருடமும் வழக்கம்போல் சாரல் திருவிழா எட்டு நாட்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்க விழாவில், மாண்புமிகு அமைச்சா் பெருமக்கள் கலந்து கொண்டு சாரல் திருவிழாவினை தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

சாரல் திருவிழா தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுக்கும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலை பண்பாட்டுத்துறை, சுற்றுலாத் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும். காவல் துறையின் மூலம் தேவையான பாதுகாப்பு வசதிகளை மேற்கொள்ள வேண்டும். பேரூராட்சித் துறையின் மூலம் குற்றாலத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் கலைவாணர் கலையரங்கினை சுத்தப்படுத்தி, தேவையான அடிப்படை வசதிகளை செய்திட வேண்டும். தோட்டக்கலைத் துறையின் மூலம் கண்காட்சியினை சிறப்பாக நடத்திடவும், விளையாட்டுத் துறையின் மூலம் விளையாட்டுப் போட்டிகளை நடத்திடவும், சமூக நலத்துறையின் மூலம் பெண்களுக்கான போட்டிகளை நடத்திடவும் ஏற்பாடு செய்திட வேண்டும். மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை அரங்குகள் அமைத்து, பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்திட வேண்டும். மேலும், அனைத்து துறை அலுவலர்களும் தத்தம் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டப் பணிகளை அனைவரும் ஒருங்கிணைந்து, கடந்த ஆண்டுகளை காட்டிலும் இவ்வாண்டு சாரல் திருவிழாவினை வெகு சிறப்பாக கொண்டாட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்தி குமார்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., தென்காசி கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திரு.பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீரபாண்டியன், உதவி ஆணையர் (கலால்) திரு.ராமசுப்பிரமணியன், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்லி லீமா அமலினி, மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.நெல்சன், பேரூராட்சித் துறை உதவி செயற்பொறியாளர் திரு.ஜோதிசற்குணம், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கணேசன் உள்பட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.